தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

துன்முகி, ஆடி 19, திருவள்ளுவர் ஆண்டு–2047

2016 ஆகஸ்ட் 3, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு.”

உலகத்தில் உள்ள சான்றோர்கள் எப்படி வாழ்கிறார்களோ அதுபோல அவர்களைப் பின்பற்றி அவர்கள் கூறும் வாழ்வியல் நெறிப்படி வாழ்வதே உயர்ந்த அறிவுடைமை ஆகும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

16—

ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம்

***13–திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டத்திலுள்ள காட்டுமன்னார்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி 2 கோடியே 39 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டடம் கட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்த் திட்டத்தின்கீழ் நிதியொதுக்கீடு செய்து, மேற்படி அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழுத கைகளின் துன்பம் துடைக்கும், தூய அன்பின் உருவாய் நிற்கும், எழுதாத ஓவியமே, என் தாயே! எழில்மிகும் போயஸ் தோட்டத்தில் வழுவாமல் நாளும் வந்தருள்வாய், வள்ளல் முகம் கொண்டு வரம் தருவாய், தமிழ் வாழ, தமிழர் குலம் வாழ நல்லறம் நாள்தோறும் தருவாய், வழுதிலா புகழ் தரும் எங்கள் இதய தெய்வமே! மாட்சிமை நிறைந்த தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, தங்கள் பாத மலர்களைப் பணிவோடு வணங்குகிறேன்.*

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதி, காட்டுமன்னார்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்த் திட்டத்தின்கீழ், ரூபாய் 2 கோடியே 39 இலட்சம் நிதியொதுக்கீடு செய்து, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற பதிலுக்கு, வாழும் வள்ளல் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் நெஞ்சம் நிறைந்த

2016 ஆகஸ்ட் 3]

நன்றியினைத் தெரிவித்து, இந்த நிதியாண்டிலேயே ஒப்பந்தம் கோரப்பட்டு, கட்டடப் பணிகளைத் தொடங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், கடந்த 5 ஆண்டு காலத்தில் 148 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 78 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டு, அவற்றில் 70 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 8 கட்டடப் பணிகள் பல்வேறு கட்டங்களில் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

கடலூர் மாவட்டத்தில் மொத்தமுள்ள 13 ஊராட்சி ஒன்றியங்களில் கடலூர், குறிஞ்சிப்பாடி, நல்லூர் மற்றும் அண்ணா கிராமம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களுக்கு, புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. தற்போது, கீரப்பாளையம் மற்றும் குமராட்சி ஊராட்சி ஒன்றியங்களுக்கான அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் விடுத்த கோரிக்கை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கனிவுடன் பரிசீலனை செய்யப்பட்டு, காட்டுமன்னார்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட 2 கோடியே 39 இலட்சம் ரூபாய்க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எந்தத் திட்டத்தை அறிவித்தாலும் அது உடனடியாக, வேகமாக நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

[2016 ஆகஸ்ட் 3

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் வரிப் பணம், மக்கள் நல்வாழ்விற்கே பயன்பட வேண்டும் என்றார் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள். அண்ணா அவர்களின் அறவழியில், நல்வழியில் கடந்த 2015–2016 ஆம் நிதியாண்டில் காட்டுமன்னார்கோவில் தொகுதியில் அங்கம் வகிக்கின்ற குமராட்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கும், கீரப்பாளையம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கும் இரட்டை இலையாய் இரண்டு அலுவலகங்கள் கட்டுவதற்கு நிதியொதுக்கீடு செய்து, கட்டுமானப் பணிகள் தற்போது நடைபெற்று வருவதற்கான நடவடிக்கையை மேற்கொண்ட பொன்மனத் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய சார்பிலும், தொகுதி மக்கள் சார்பிலும் நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–05

2013 ஆம் ஆண்டு காட்டுமன்னார்கோவில் தொகுதியில், புதிய ஒன்றியமாக ஸ்ரீமுஷ்ணம் ஒன்றியம் அறிவிக்கப்பட்டது. 2016–லிருந்து தன்னிச்சையாகச் செயல்படுவதற்கேற்றவாறு அந்த ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தைக் கட்டுவதற்கான கட்டுமானப் பணிகள் தொடங்கப்படுமா? நடைபெறவிருக்கின்ற உள்ளாட்சித் தேர்தலில் புதிய உள்ளாட்சிப் பிரதிநிதிகள் இவ்வொன்றிய அலுவலகத்திலிருந்து செயல்பட அரசு முயற்சிகள் மேற்கொள்ளுமா என்பதனைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி*: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு, புதிதாய் பிரிக்கப்பட்ட ஸ்ரீமுஷ்ணம் ஒன்றியம் சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு அந்தக் கோரிக்கை கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2016 ஆகஸ்ட் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வறுமையை ஒழிப்பதே என் வாழ்நாள் கனவு' என்று வாக்களித்த மக்களின் விரலில் மை காய்வதற்குள், வாக்குறுதிகளை நிறைவேற்றி, சாதனை மட்டுமல்ல, சரித்திரமும் படைத்து வரும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்கி, எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட அரக்கோணம் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம் 1965 ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகும். அது மிகப் பழமையான கட்டடம். அதனை அவ்வப்போது பழுதுபார்த்தும் போதிய வசதியில்லாமல் பயனில்லாமல், இருந்து வருகிறது. எனவே, அந்தப் பழமையான கட்டடத்தை அகற்றி, ஒரு புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, அந்தக் கட்டடம் 1965 ஆம் ஆண்டு கட்டப்பட்ட கட்டடம் என்றும், அந்தக் கட்டடம் பழுதடைந்திருக்கிறது என்றும் சொன்னார்கள். ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடத்தைப் புதிதாகக் கட்டுவதற்கு சில வரைமுறைகள் உள்ளன. ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் 30 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டு மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்தால், அதற்கு புதிய கட்டடம் கட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின்பேரில் எடுத்துக்கொள்ளலாம். 1965 ஆம் வருடம் என்பதால், அந்தக் கட்டடம் கண்டிப்பாக விதிமுறைகளுக்கு உட்பட்டு தான் வருகிறது. ஆகவே, அதிகாரிகளை வைத்து ஆய்வு செய்து, அந்தப் பணியை எடுக்க வேண்டிய சூழ்நிலை இருந்தால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதியில் திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியம் என இரண்டு ஒன்றிய அலுவலகங்கள் இருக்கின்றன. கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கட்டப்பட்டு, நிகழ்கால ஆட்சியில் திறந்து வைக்கப்பட்டது. அந்தக் கட்டடங்களுக்கு என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஆண்டுக்கு 5 இலட்சம் ரூபாய் வீதம் 10 இலட்சம் ரூபாயை மாவட்ட ஆட்சித் தலைவர், அரசுக் கட்டடங்களுக்கு சூரிய மின்னொளித் திட்டம் என்ற பெயரில் பிடித்தம் செய்து கையில் வைத்திருக்கிறார். ஆனால், இதுவரை அந்தத் திட்டத்தை மேற்படி ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் செயல்படுத்தவில்லை. சட்டமன்ற உறுப்பினரான என்னுடைய கோரிக்கையைப்போலத்தான் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுடைய நிலுவைத் தொகையும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய அலுவலகத்தில் உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எங்களிடம் பிடித்தம் செய்து, மாவட்ட ஆட்சித் தலைவர் கையிருப்பில் இருக்கிற அந்த 10 இலட்சம் ரூபாயை அரசுக் கட்டடங்களுக்கான சூரிய மின்னொளித் திட்டத்திற்கு பயன்படுத்துவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அனைத்து அரசுக் கட்டடங்களிலும் சூரிய மின்னொளி மூலமாக உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தைப் பயன்படுத்த வேண்டுமென்ற திட்டத்தை அறிவித்தார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 5 ஆண்டு*

ஆட்சிக் காலத்தில் 148 கோடியே 25 இலட்சம் ரூபாயில், 78 புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்களில் சூரிய மின்னொளித் திட்டத்தை செயல்படுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டு, 70 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்களில் மேற்படி திட்டத்திற்கான பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. அந்தச் சூரிய மின்னொளித் திட்டத்திற்காக ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும் நிதி பெறப்படும்போது, அவர்களுடைய ஒப்புதல் கடிதம் பெறப்படுகிறது. அது கண்டிப்பாகப் பயன்படுத்தப்படும். அது வரையறைகளுக்கு உட்பட்ட வேலையாகும். சூரிய மின்னொளித் திட்டத்திற்கு அந்தத் தொகையைப் பயன்படுத்த முடியாமல் இருந்தால், மாற்று வழியில் அந்த உறுப்பினர் பயன்படுத்திக்கொள்ளலாம். பயன்படுத்த வேண்டிய சூழ்நிலை இருக்கும்போது அது கண்டிப்பாகப் பயன்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. பொன்முடி அவர்கள்.

முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியமானது, முகையூர் ஒன்றியம் என்றும், மணம்பூண்டி ஒன்றியம் என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. ஆனால், அலுவலகம் மட்டும் இன்னும் பிரிக்கப்படாத ஒரு சூழ்நிலை உள்ளது. அதற்குக் கட்டடமும் இல்லை. எனவே, புதிய ஒன்றியத்திற்கான அலுவலகத்தைப் பிரித்து, கட்டடங்களைக் கட்டுவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை துறை அலுவலர்கள்மூலம் ஆய்வு செய்து, அந்தக் கட்டடம் 30 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டடமாக

[2016 ஆகஸ்ட் 3

இருந்தாலும் சரி, அல்லது ஒன்றியங்கள் பிரிக்கப்பட்டு, அதற்காகப் புதிதாகக் கட்டடம் கட்ட வேண்டிய சூழ்நிலையாக இருந்தாலும் சரி, அவசியம் இருப்பின், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் ஆளுகிற முதல்வர்களில், எந்த முதல்வரும் செய்யாத சாதனையாக, தொடர்ந்து வரியில்லா நிதிநிலை அறிக்கைகளைத் தாக்கல் செய்கின்ற ஒரே முதல்வரான தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் தொட்டு பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களிடம் ஒரு பொதுவான கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிக்குச் சொந்தமான சாலைகளில் classification *செய்யப்படாத சாலைகள் நிறைய இருக்கின்றன. கூடலூர் நகராட்சிக்கு சம்பந்தப்பட்ட விவசாய நிலங்களுக்குண்டான பாதைகளை நான் சென்று பார்த்தேன். அந்தப் பாதைகளை நகராட்சி மூலமாகப் போடுவதற்கு சம்பந்தப்பட்ட அரசு அலுவலர்களைக் கேட்டுக்கொண்டபோது, எங்களிடம் சாலைகள் சம்பந்தப்பட்ட விவரம் அடங்கிய பதிவேடு ஒன்று இருக்கிறது; அந்தப் புத்தகத்தில் அந்தச் சாலைகள் எங்களுக்கு வரவில்லை; ஆகவே,* classification *செய்தால்தான் நாங்கள் அந்தச் சாலையை எடுத்துச் செய்ய முடியும்' என்ற பதிலை அரசு அதிகாரிகள் கூறுகிறார்கள். அந்த வகையான சாலைகளை தமிழ்நாடு முழுக்க முறையாக எடுத்து நகராட்சிக்கோ, பேரூராட்சிக்கோ அல்லது ஊராட்சிக்கோ கொடுத்தால், அந்தச் சாலைகளைப் போடுவதற்கு வசதியாக இருக்கும்; விவசாயிகளும் பயனடைவார்கள் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.*

2016 ஆகஸ்ட் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி, மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாத கேள்வியென்றாலும்கூட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சரித்திர சாதனையாக சாலைப் பணிக்காக அதிக நிதியை ஒதுக்கியுள்ளார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். அனைத்து மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி போன்ற பகுதிகளிலெல்லாம் எங்கு பார்த்தாலும் புத்தம் புதிய சாலைகள் இன்றைக்குப் போடப்பட்டிருக்கின்றன. பொது நிதியிலிருந்து நாம் எந்தப் பணியை வேண்டுமென்றாலும் செய்யலாம். அதேபோல* unapproved layout *இடங்களைப் பொறுத்தவரை, சில பிரச்சினைகள் இருக்கின்றன. அங்கே, பிளாட் போட்டு வீடுகளையெல்லாம் கட்டிவிட்டு, ஏதோ சூழ்நிலைகள் காரணமாக சாலைகளை அமைக்காமல் விட்டுவிட்டுச் சென்றுவிடுவார்கள். அந்தச் சாலையை, எங்களுக்கு ஒப்படைக்காமல், எங்களால் அப்பணியை எடுக்க முடியாது. அதுபோல, இன்னொரு விஷயம், சில நிதிகளில், சில வரைமுறைகள் இருக்கின்றன. ஆகவே, எந்தப் பேரூராட்சியில், எந்தச் சாலை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று கண்டிப்பாக அந்தச் சாலை போடப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர் அவர்கள்.*

திரு. க. சுந்தர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முறியடிக்க முடியாத சாதனைகளுக்குச் சொந்தக்காரர், வாழும் வள்ளுவர் தலைவர் கலைஞர் அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, தமிழகத்தை வழிநடத்தயிருக்கின்ற 'நமக்கு நாமே' நாயகன் எங்களுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் அண்ணன் தளபதியையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

தமிழ்நாட்டிலே ஊராட்சி ஒன்றியங்கள் மிகப் பெரியதாக இருக்கின்றன. 58 ஊராட்சிகள், 59 ஊராட்சிகள், 61 ஊராட்சிகள், 69 ஊராட்சிகள் என்று இருக்கின்றன. உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம் 73 ஊராட்சிகளைக் கொண்டது. ஆக, இதுபோன்ற ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிக்க வேண்டுமென்று ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முன்மொழிவுகளை அனுப்பியிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிக்கும் எண்ணம் அரசுக்கு இருக்கின்றதா? அது எந்தளவிலே இருக்கின்றது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட இந்தக் கேள்வி, மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாத கேள்வி. உள்ளாட்சி அமைப்புகளைப் பிரிப்பதென்றால், அங்கிருக்கக்கூடிய தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளினுடைய மாவட்டச் செயலாளர்கள், அங்கிருக்கக்கூடிய உள்ளாட்சி மன்றத்தில் கூட்டம் நடத்தி எடுக்கப்பட்ட முடிவை மாவட்ட ஆட்சியருக்குப் பரிந்துரை செய்ய வேண்டும். அதற்குப் பின்னர், மாவட்ட ஆட்சித் தலைவர் இந்தத் துறைச் செயலாளருக்குப் பரிந்துரை செய்வார். (குறுக்கீடு) அதாவது, அங்குள்ள அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளுடைய மாவட்டச் செயலாளர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடக்கின்ற கூட்டத்தில் கலந்துகொண்டு, கருத்துகளை தெரிவித்தபின், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அந்தக் கருத்துரு பரிந்துரை செய்யப்பட்டு, அரசுக்கு வரும். அதேபோல, மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் அவருடைய ஒன்றியத்தைப் பற்றிச் சொன்னார்கள்.*

முற்பகல் 10–15

நாங்கள் ஆய்வு செய்யும்போது எதிர்க்கட்சிக் கொறடா தெரிவித்த ஒன்றியத்தைப் பிரிப்பது பற்றி சம்பந்தப்பட்ட

2016 ஆகஸ்ட் 3]

மன்றத்தாலே பரிந்துரை செய்து வரவில்லை. அப்படி வருகின்றபட்சத்தில், அவசியம் இருப்பின், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013 ஆம் ஆண்டு, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய இரண்டு ஊராட்சி ஒன்றியங்களை, அதாவது, தளி ஒன்றியத்தைப் பிரித்து, அஞ்செட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு ஊராட்சி ஒன்றியமும், அதேபோல், பர்கூர் ஒன்றியத்தைப் பிரித்து, போச்சம்பள்ளியைத் தலைமையிடமாகக் கொண்ட இன்னொரு ஊராட்சி ஒன்றியமும் அமைக்கப்படும்**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்குட்டுவன், மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாத கேள்வியையெல்லாம் கேட்கக்கூடாது. அது நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கேட்ட கேள்வி, மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாதது. இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. மாரியப்பன் கென்னடி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.